Copy of Deposition

சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்

அசல் வழக்கு எண்.107/2024

பெயர்:–சாரதாம்பாள் நாள்:18.03.2026

பி.வா.சா.1 சாரதாம்பாள் ஆஜர். சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

குறுக்கு விசாரணை :– (வாதி தரப்பில்)

என்ன வேலை செய்கிறேன் என்றால் ஆத்தோரத்தில் கடை வைத்திருக்கிறேன். தேங்காய் பழம் வியாபாரம் செய்கிறேன். கோவில் பக்கத்தில் கடை வைத்துள்ளேனா என்றால் விநாயகர் கோவில் பக்கத்தில் கடை வைத்துள்ளேன். சொத்து எத்தனை ஏக்கர் உள்ளது என்றால் பூமி இல்லை. தாவா சொத்து எவ்வளவு விஸ்தீரணம் என்றால் 1 ஏக்கர். எந்த ஆண்டு வாங்கப்பட்டது என்றால் 2003 மற்றும் 2005ம் ஆண்டு. ஒரு ஏக்கர் ஒரே இனமாக உள்ளது. வயல்காடா என்றால் ஆமாம். தாவா சொத்திற்கு தடம் இல்லையா என்றால் ஆமாம். தடம் விடமாட்டேன் என்று சொன்னார்கள். பத்திரத்திற்கு தடம் இல்லையா என்றால் கவுரில்தான் தடம் உள்ளது. கவுர் என்றால் வடிகால் என்றால் சரிதான். எனக்கு 10 சென்ட் இடம் கொடுக்க வேண்டும் அதற்கு தடம் கொடுப்பதாக சொன்னதால்தான் ஒப்பந்தம் போட்டேன். 10 சென்ட் கொடுப்பதாக பத்திரத்தில் எழுதவில்லை என்றால் பத்திரத்தில் எழுதப்பட்டுள்ளது. என்னிடம் காண்பிக்கப்படும் வா.த.சா.ஆ.1 அவ்வாறு காணப்படவில்லை. வா.த.சா.ஆ.1 ஆவணத்தில் அனைத்து பக்கங்களிலும் உள்ள என்னிடம் காட்டப்படும் கையொப்பங்கள் என்னுடையது அல்ல, அவர்களே எழுதிக்கொண்டார்கள், அவர்களே போட்டுக்கொண்டார்கள். சோமசுந்தரம் என்பவர் யார் என்றால் எனது கணவர். செந்தில்குமார் எனது மகன். சோமசுந்தரம் எனது கணவர் இறந்துவிட்டார். இந்த வழக்கு நடத்துவதற்கு எனது மகன் செந்தில்குமார்தான் உதவி செய்கிறாரா என்றால் ஆமாம். இந்த பத்திரம் எழுதியவர் யார் என்றால் கொடுமுடி பெரியதம்பி, பத்திர எழுத்தர் எழுதினார். பெரிய தம்பியை சாட்சிக்கு கூப்பிட்டோமா என்றால் இல்லை. அவர்களே எழுதிக்கொண்டார்கள், கையொப்பம் போட

சொன்னார்கள். இரண்டு பத்திரத்திலும் எழுதியுள்ள விவரம் எனக்கு தெரியாதா என்றால் தெரியும். இரண்டு ஆவணங்கள் வாங்கியதில் ரூ.6,00,000/– என போட்டு கிரைய செலவு கம்மியாகும் என்று சொல்லி பாஸ்கரன் ஒரு ஆவணம் எழுதச்சொன்னார். ஒன்று பதிவு செய்தது, மற்றொன்று பதிவு செய்யாதது. பதிவு செய்யாததை மறைத்து கொண்டார்கள். பதிவு செய்த பத்திரம், பதிவு செய்யாத பத்திரம் இரண்டையும் நான் படித்தேனா என்றால் படித்து பார்த்தேன். ஒன்றில் ரூ.90,00,000/– என போட்டிருந்தது. மற்றொன்றில் ரூ.6,00,000/– போட்டிருந்தது. நான் சொல்லி அந்த பத்திரங்கள் தயார் செய்யப்படவில்லையா என்றால் நாங்கள் சொல்லி தயார் செய்யப்படவில்லை. ரூ.6,00,000/– மற்றும் ரூ.90,00,000/– கிரைய பத்திரங்களுக்கு அட்வான்ஸ் தொகை எவ்வளவு வாங்கினேன் என்றால் ரூ.2,00,000/–வாங்கினேன். கிரைய ஒப்பந்த பத்திரத்தில் 3வது நபர் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். எவ்வளவு நாட்கள் கெடு எழுதப்பட்டது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எழுதியது, பத்திரம் வாங்கியது அவர்கள்தான். பதிவு செய்த பத்திரத்தில் எங்கு வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் பத்திர ஆபிஸில் போட்டேன். பதிவு செய்யாத பத்திரத்தை அங்கேயே வைத்து அப்போதே கையொப்பம் செய்தேன். பெரியதம்பி இடத்தில் கையொப்பம் செய்தேன். பதிவு செய்யாத பத்திரத்தில் பத்திர அலுவலகத்தில் வைத்து கையொப்பம் செய்தேனா என்றால் பெரியதம்பி அலுவலகத்தில் வைத்து கையொப்பம் செய்தேன். கிரைய ஒப்பந்த பத்திரம் சொத்து வாங்குபவர் கையில்தான் இருக்கும் என்றால் உடன்படிக்கை போட்ட சமயத்தில் பணம் ரூ.2,00,000/–வாங்கவில்லை. பத்திர அலுவலகத்தில் கொடுக்கவில்லை. அட்வான்ஸ் தொகையை நான் கேட்கவும் இல்லை, அவர்கள் எழுதிய தேதியில் கொடுக்கவும் இல்லை. கையொப்பம் மட்டும் கேட்டார்கள் நான் போட்டேன். சொத்து விற்பனை பற்றி பேசும் சமயத்தில் எங்கள் இருவர் இடையில் யார் தானாவதி பேசினார்கள் என்றால் புரோக்கர் யாரும் இல்லை, நேரடியாக வந்து இருவரும் கேட்டார்கள். எதற்காக அந்த சொத்தை வாங்குவதாக கூறினார்கள் என்றால் வீட்டுமனையாக விற்று காசு தருவதாக கூறினார்கள். எனது பூமிக்குள் 1500 அடி நீளத்திற்கு தடம் அமைக்க வேண்டிய காரணத்திற்காக இந்த சொத்து வாங்குவதாக பத்திரத்தில் எழுதப்பட்டுள்ளதா என்றால்

என்னுடைய காட்டிற்குதான்தடம் வேண்டும் என்று சொல்கிறேன். என் பூமிக்கு செல்வதற்கு  தடம் போடுவதற்குதான் ஒப்பந்தம் போடப்பட்டதா என்றால் காட்டை கேட்டார்கள், தடம் விடுவதாக சொன்னார்கள், அதனால்தான் ஒப்பந்தம் போட்டேன். என்னுடைய ஒரு ஏக்கருக்கு தடம் விடுவதாக சொன்னார்கள்.  ஆனால் தடம் விடமாட்டேன் என்கிறார்கள். நான் சொல்வதுபோல் தடம் விடுவது, 10 சென்ட் இடம் கொடுப்பது பற்றி  இந்த ஒப்பந்த பத்திரத்தில் எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 2 வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.1 ஒப்பந்த பத்திரம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. அவர்களே எழுதிக் கொண்டார்கள். எனது ஒரு  ஏக்கர் பூமிக்குள் கிணறு இருந்ததா என்றால் இருந்தது. அந்த கிணற்றை வாதிகள் அழித்து வீட்டுமனையாக்கி எனக்கு பணம் தருவதாக சொன்னார்கள் நான் ஒத்துக்கொள்ளவில்லை. ரோடு போட்டார்களா என்றால் இல்லை. ஒப்பந்தத்திற்கு பிறகு பூமியை நிரவி சமன் செய்தார்களா என்றால் நான் போகவில்லை, பார்க்கவில்லை. இந்த வழக்கில் வாதிகள் பாஸ்கரன், வேலுச்சாமி என்ன சொல்லியுள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் வட்டியும், முதலுமாக கொடுக்க சொல்லி நோட்டீஸ் கொடுத்தார்கள். கேஸ் போட்டார்கள். என்னிடம் காட்டப்படும் எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்தேனா என்றால் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது. 2 ஒப்பந்த பத்திரங்களில் பதிவு செய்யப்பட்டது, பதிவு செய்யப்படாத இரண்டும் ஒரே மாதிரியான வாசகங்கள் கொண்டது அல்ல என்றால்  சரிதான். ஒரு கிரையத்திற்கு என்ன செலவு ஆகும் என்று எனக்கு தெரியாது என்றால் பத்திரம் வாங்கி செலவு செய்தால்தான் தெரியும். எனக்கு தெரியாது. கிரையத் தொகை  ரூ.6,00,000/− என்றால் எவ்வளவு கிரைய செலவாகும், ரூ.90,00,000/−என்றால் எவ்வளவு கிரைய  செலவாகும் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். கிரையம் வாங்கும்போது யார் கிரைய செலவு  செய்வார்கள் என்றால் கிரையம் வாங்குபவர்தான் செலவு செய்வார்கள். ரூ.90,00,000/− ற்கு கிரையம் செய்து கொடுப்பதற்கு தயாராக இருப்பதாக வக்கீல் நோட்டீஸ் அனுப்பினேனா என்றால் இல்லை. கிரைய ஒப்பந்தம் பற்றிய உண்மை சங்கதி எனக்கும் வாதிகளுக்கு மட்டும்தான் தெரியுமா என்றால் ஆமாம். வேறு யாருக்கும்  தெரியாதா என்றால் தெரியாது.

Copy of Deposition

**வாதி வழக்கறிஞர் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**

| |
|---|
| Taken down by me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br><br>P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2026.03.18 15:56:46 +0200<br>Subordinate Judge,<br>Kodumudi |